O.S.No. : 92/2020

Dated : 23.01.2026

**வா.சா.1 : சித்ரா ; க/பெ. பிரதீப்**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

4. நான் எனது வழக்குரையில் பெள்ளா கவுடர் மகன் லிங்கன் என்பவருக்கு சொந்தமான 4 ½ செண்ட் பூமியை எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றும் அந்த லிங்கன் என்பவரது சகோதரர்தான் பிரதிவாதிகளின் தந்தையான பெள்ளி கவுடர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் மொத்தமாக கிரையம் பெற்ற 35 ½ செண்ட் சொத்துக்களில் ஏதாவது சொத்தினை எனது தகப்பனார் விற்பனை செய்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் சர்வே எண் 78-ல் கிரையம் பெற்ற பூமியில் 2 நபர்களுக்கு தலா 2 செண்ட் பூமியை பிரமாண பத்திரிக்கை மூலம் விற்பனை செய்து அதில் அந்த 2 நபர்களும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5. எனக்கு எனது தகப்பனார் மேற்படி பூமியை விற்பனை செய்த விவரம் தெரிந்தும் வழக்கிற்காக தற்போது சரியல்ல என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, யாரும் தோட்டத்தில் வீடு கட்டவில்லை, நாங்கள் தற்போது அங்கு விவசாயம் செய்து வருகிறோம். வழக்கில் கூறியுள்ள 35 ½ செண்ட் தாவா சொத்து முழுவதும் தேயிலை தோட்டம் மட்டும்தான் உள்ளதா என்றால் 1988 ஆம் ஆண்டு கிரையம் பெற்றதிலிருந்து இன்றுவரை மேற்படி 35 ½ செண்ட் முழுவதும் தேயிலை தோட்டமாகத்தான் உள்ளது. பிரதிவாதிகள் தங்களது பூமியும் எனது தகப்பனாரின் சுவாதீனத்தில் உள்ளது என்பதால் அவரது சுவாதீனத்தில் உள்ள பூமியை அளக்க கேட்டபோது எனது தகப்பனார் மறுத்துவிட்டார் என்றும், இன்றுவரை நானும் மேற்படி பூமியை அளக்க மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6. சர்வே எண் 78-ல் பிரதிவாதிகளின் சித்தப்பாவிற்கு உள்ளதுபோக 4 ½ செண்ட் பூமி பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் மேற்படி 4 ½ செண்ட் பூமியில் தற்போதுவரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் வாங்கியதற்கு பிறகு அதில் வேறு யாருக்கும் உரிமை

இல்லை. நான் இந்த வழக்கினை தாக்கல் செய்த பிறகு இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றதற்கு பின்னிட்டு பிரதிவாதிகளை மேற்படி 4 ½ செண்ட் பூமிக்குள் விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல, தாவா சொத்து எங்களுக்கு சொந்தமான இடமாகும், பிரதிவாதிகளுக்கு அதில் உரிமை இல்லை.

7. எனது தகப்பனார் ஏற்கனவே 4 செண்ட் பூமியை விற்றுள்ளார் எனவும், மேற்படி 4 செண்ட் பூமிக்காக நாங்கள் பிரதிவாதிகளுக்கு சொந்தமான 4 ½ செண்ட் பூமியை ஆக்கிரமித்து கொண்டு பிரதிவாதிகளுக்கு அதை கொடுக்க மறுக்கிறோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் கையொப்பம் எவ்வாறு இருக்கும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராஜன், தகப்பனார் பெயர் லிங்கன், கிண்ணக்கொரை என்ற முகவரியில் எனது தகப்பனாரை தவிர வேறு நபர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் எனது தகப்பனார் சொத்தினை விற்பனை செய்ததை தெரிந்தோ, தெரியாமலோ பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கில் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. மேற்படி எனது தகப்பனார் விற்பனை செய்த 4 செண்ட் பூமியை சட்டப்படி பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் மூலம் விற்க இயலாது என்பதால் எனது தகப்பனார் பிரமாணப்பத்திரம் மூலம் விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.01.24 17:47:53 +0530